தாலுக்காக்களில் அவற்றைச் சேர்த்தால் போக்குவரத்துக்கு வசதியாக இருக்கும் என்பதை அரசு பரிசீலிக்கும்.. அப்படிப் பரிசீலிக்கிறபோது சிலபேர் எந்தெந்த ஊர்களுக்குப் போய்க்கொண்டிருந்தார்களோ அதே ஊர்களுக்குப் போகவேண்டும் என்றுதான் சொல்கிறார்கள் தூரம் அதிகமாக இருந்தாலும். அதற்கு மாறுபட்டிருந்தால் வேண்டாம் என்கிறார்கள். எனவே அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 23, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

23—

பேர்ணாம்பட் வட்டம் துவக்குதல்

*** 407101 டாக்டர் ஜெ. பரந்தாமன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், குடியாத்தம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து பேர்ணாம்பட் வட்டம் புதியதாகத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இன்றைக்கு புதிதாக அங்கே ஒரு வட்டம் துவக்க வேண்டும் என்ற குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் வட்டம் மிகப் பெரியது. சுமார் 75 கிலோ மீட்டர் நீளத்திற்குப் பரந்திருக்கிறது. குடியாத்தத்திற்கு எங்கிருந்து வரவேண்டும் என்றாலும் 35 கிலோ மீட்டர் சுற்றிக்கொண்டுதான் வர வேண்டும். அது ஆந்திர மாநில எல்லைப் பகுதியாகவும் இருக்கிறது. அதன் பரப்பளவு சுமார் 1098 சதுர மைல். 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை அங்கே உள்ளது. 161 வருவாய்க் கிராமங்கள் இருக்கின்றன. ஆயிரம் சிறு கிராமங்கள் இருக்கின்றன. 105 கிராம நிர்வாக அலுவலர்கள், 270 கிராம உதவியாளர்கள் இருக்கிறார்கள். 9 பிர்க்கா, 4 ஒன்றியம், 6 பேரூராட்சி, ஒரு நகராட்சி ஆகியவை இருக்கின்றன. இப்படி மிகப் பெரிய அளவில் அது இருக்கிறது.

1995 நவம்பர் 7]

எனவே இயற்கைச் சீற்றங்கள் மற்றும் சட்ட ஒழுங்குப் பிரச்சினை வருகிறபோது மிகுந்த சிரமமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆடிக்கிருத்திகை போன்ற சமயங்களில் இந்து, முஸ்லிம் மக்களின் ஒற்றுமையைக் காக்கவேண்டி இருக்கிறது. எனவே நிர்வாக நன்மைகளுக்காக புதிய பேரணாம்பட் வட்டம் உருவாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது ஒரு பெரிய பகுதியாக இருக்கிறது, தூரம் அதிகமாக இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். நான் புதுக்கோட்டை மாவட்டத்திற்குச் சொன்ன அதே பதிலைத்தான் சொல்ல வேண்டும் என்றாலும், வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே 12 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. அங்கே 7 வட்டங்கள்தான் இருக்கின்றன. எனவே அதை மாவட்ட ரீதியாகப் பார்க்கிறபோது அதாவது அங்கே இருக்கின்ற வட்டங்களையும், அங்கே இருக்கின்ற ஜனத்தொகையையும் பார்க்கிறபோது வட்டங்கள் குறைவாக இருக்கின்றன என்பதை அரசு உணர்கிறது. எனவே அதுபற்றி அரசின் குறிப்பில் இல்லாதிருந்தாலும் எதிர்காலத்திலே வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிற 7 வட்டங்களையும் ஆய்வு செய்து எப்படி, எப்படிச் செய்யவேண்டும் என்பதை எல்லாம் கவனித்து அரசு ஆவன செய்யும் என்பதையும், நிதிநிலைமைக்கேற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பாதி கனிவான பதிலுக்கு நன்றி. தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்களும், சிறுபான்மை முஸ்லிம் மக்களும் அதிகமாக வாழ்கிற பேரணாம்பட்டை ஆதிதிராவிட மக்களையும் சிறுபான்மை மக்களையும் கண் இமையாகக் காக்கும் புரட்சித் தலைவியின் ஆசியோடு வாய்ப்பு வரும்போது—குடியாத்தம் வட்டத்தைப் பிரித்து, தேவைப்பட்டால் பேரணாம்பட்டு ஒன்றியத்தின் மறுபாதியை புதிய வட்டமான வாணியம்பாடியிலிருந்து கொஞ்சம் பிரித்து பின் இரண்டையும் சேர்த்து, வாய்ப்பு வரும்போது பேரணாம்பட்டு வட்டம் புதிதாக உருவாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் அதைப்பற்றி ஆராய்கிறபோது அங்கே தலைமையிடம் என்று எதை வைப்பது, என்ன செய்வது என்பதை எல்லாம் ஆய்வு செய்து மக்களின் விருப்பத்திற்கேற்றாற்போல், அவர்களின் வசதிக்கேற்றாற்போல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 24, திரு. பே. தர்மலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

24—

ரெட்டியார்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டுதல்

****33643 திரு. பே. தர்மலிங்கம்:***

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாளையங்கோட்டையில் உள்ள ரெட்டியார்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டுவதற்கு என ஒதுக்கப்பட்ட இடத்தில் விரைவில் கட்ட அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பாளையங்கோட்டையில் உள்ள ரெட்டியார்பட்டி கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டத் தேவையான நிலம் கிடைக்கப் பெறவில்லை. அதுமட்டுமல்லாமல், அப்பகுதி மக்களிடமிருந்து கிடைக்க வேண்டிய நன்கொடைத் தொகை ரூ.10,000/- இதுவரை கிடைக்கவில்லை. எனவே, இந்தக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் இப்பொழுது பரிசீலனையில் இல்லை.

திரு.பே. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பாளையங்கோட்டைத் தொகுதியில் ரெட்டியார்பட்டி கிராமத்தில் ஊர் மக்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட கட்டிடத்தில் தான் சுமார்